[1st November 1962

Goods transport service

* 1057 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start goods tranport service by the Government Transport Department; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No, Sir.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : லாரி ஆபரேட்டர்கள் வேலை நிறுத்தம் செய்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் கூறினர்களே, அது அவர்களைப் பயமுறுத்துவதற்காக மட்டுந்தானு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலை நிறுத்தத்தை அவர்கள் தொடர்ந்து நடத்தியிருந்தால், லாரி சர்வீசைக்கூட அரசாங்கம் எடுத்து நடத்துவதற்கு முன்வந்திருக்கும். வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கவில்லை. அதனுல் கைவிட்டாகி விட்டது.

பஞ்சாயத்து நிர்வாகம்

*** 1058 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பஞ்சாயத்து தலைவர்களின் பேரில் அடிக்கடி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அதிக அளவில் மாநிலத்தில் கொண்டுவரப் படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) பஞ்சாயத்து நிர்வாகம் சீரான முறையில் நடைபெறும் பொருட்டு தலைவர் தேர்தல்-பதவி இழத்தல் முறைகள் ஏதாகிலும் சட்ட மாறுதல் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேச முண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) 1962-ம் வருடம் ஜுன் மாதம் முடிய 190 பஞ்சாயத்துத் தலைவர்கள் பேரில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அவற்றில் 80 தலைவர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

(இ) இல்லை, ஐயா.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 'பஞ்சாயத்துப் பிரசிடென்ட்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்காகச் சட்டங்கள் இயற்ற அரசாங்கம் சம்மதிக்கிறது' என்று திருச்சியிலே முதல் அமைச்சர் அவர்கள் பேசியுள்ளார்களா ? அப்படிப் பேசியிருந்தால், அதற் கான சட்டங்கள் எப்பொழுது கொண்டுவரப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரை, முதல் அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டத்தை மாற்றப் போவதாகக் கூறவில்லை.